1972 ஆகஸ்ட் 24]

(2) The Madurai City Municipal Corporation (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 25 of 1972).

(3) The Madras City Municipal Corporation (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 32 of 1972).

(4) The Tamil Nadu Public Buildings (Licensing) Amendment Bill, 1972 (L.A. Bill No. 30 of 1972).

(5) The Tamil Nadu Buildings (Lease and Rent Control) Amendment Bill, 1972 (L.A. Bill No. 29 of 1972).

I have further to announce to the House that I have received from the Hon. Speaker a copy of the Tamil Nadu General Sales Tax (Fifth Amendment) Bill, 1972 (L.A. Bill No. 51 of 1972) as passed by the Legislative Assembly and signed by him for the recommendation of the Council and certifying that the Bill is a Money Bill within the meaning of Article 199 of the Constitution of India.

4. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(1) தமிழ் நாடு 1972 ஆம் ஆண்டு கடன் நிவாரணச் சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 21/1972)—தொடர்ச்சி.

* திரு. கே. ராஜாராம் : தலைவர் அவர்களே, இந்தக் கடன் நிவாரண சட்டம், விவசாயிகள் நிவாரண சட்டம் இரண்டும் கூட்டுப் பொறுப்புக் குழுவில் தெளிவாக ஆராயப்பட்டு அதன் முடிவுப்படி திருத்தப்பட்ட மசோதா வடிவில் இங்கே சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி நான் எதுவும் குறை சொல்ல விரும்பவில்லை. ஆனால் இந்த மசோதா சட்டமாகி அமல்படுத்தப்பட வேண்டுமென்றால், இரண்டு விஷயங்களை அரசாங்கம் செய்ய வேண்டும். இல்லையென்றால், இந்தச் சட்டம் நிறைவேறியும் மக்களுக்குப் பிரயோஜனம் இல்லாமல் போய்விடும். "கன்சிலியேஷன் போர்டு" அமைத்து, கடன் வாங்கியவர் கோர்ட்டுக்குச் செல்லாமல் கன்சிலியேஷயன் போர்டுக்கு ஒரு மனு கொடுத்து விட்டால், அவர்கள் கடனை ஆராய்ந்து "ஸ்கேல் டவுன்" பண்ணி எவ்வளவு கொடுக்க வேண்டுமென்று சொல்லக்கூடிய வசதி ஏற்படும். 1937-ஆம் ஆண்டு ராஜாஜி அவர்கள் கடன் நிவாரணச் சட்டம் கொண்டுவந்தபோது, அந்த வசதி செய்யப்பட்டது. அதே வசதியை இப்போதும் செய்து வைத்தால்தான், இந்தக் கடன் நிவாரணச் சட்டத்தினால் மக்களுக்குப்

பயன் உண்டு. அப்படி இல்லையென்றால், ஒவ்வொருவரும் அவர்களுடைய கடனை "ஸ்கேல் டவுன்" பண்ணச் சொல்ல வேண்டுமென்று கோர்ட்டுக்குப் போகும் நிலைமை ஏற்பட்டால், அது மிகவும் கஷ்டமாகிவிடும். சட்டத்தினுடைய அனுகூலமும் கிடைக்காமல் போய்விடும். ஆகையினால் கன்சிலியேஷன் போர்டுக்கும் இவர்கள் மனுச் செய்யும் அந்த பழைய முறையை இப்போதும் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அது ஒன்று இரண்டாவதாக, இம்மாதிரி நூற்றுக்கு 20, 24 வட்டி வாங்கிக் கொண்டிருந்தவர்கள் பேசாமல் சும்மா இருந்துவிட மாட்டார்கள். மேலும் கடன் கிடைக்க வழியில்லாமல், பலவிதமான சங்கடங்களை உண்டுபண்ணுவார்கள். பொதுவாக அரசாங்க உத்தியோகஸ்தர்கள் மாதக் கடைசியில் கையில் பணமில்லாமல் கஷ்டப்படும்போது, ரூபாய்க்கு 4 அணு, 6 அணு வட்டி கொடுத்து வாங்கும்படியான அவசியம் ஏற்படுகிறது. அப்படி அவர்கள் கஷ்டப்படாமலிருப்பதற்கு, மாற்று ஏற்பாடு ஏதாவது செய்தாக வேண்டும். ரூ. 300 சம்பளம் வாங்கக்கூடியவர்கள், அரசாங்கச் சிப்பந்தியாக இருந்தாலும் மற்றவர்களாக இருந்தாலும், அவர்களுக்கு அங்கங்கே நகர்ப்புறங்களிலே, செமி அர்பன் ஏரியா என்று சொல்லக்கூடிய பகுதிகளிலே, இம்மாதிரி கூட்டுறவுத் துறையிலே தாராளமாகக் கடன் கிடைக்கக்கூடிய வசதி ஏற்பட வேண்டும். இந்த இரண்டையும் செய்யாத வரையில், ஒரு பிரயோசனமும் இல்லை. ஏனென்றால், கடன் கொடுத்தவர்கள் இம்சைப்படுத்தி வசூலிக்கிறார்கள். கடன் கொடுக்கும்போது 9 சதவீதத்துக்கு மேல் வசூலிக்கக் கூடாது என்று சட்டத்தில் நிர்ணயம் செய்திருப்பதால், புரோநோட்டில் எழுதும் போது 9 என்று தான் எழுதுவார்கள். ஆனால் கடன் கொடுக்கும் போதே, கடனிலேயே 24 சதவிகிதம் பிடித்துக்கொள்வார்கள். இது வழக்கமாக இருக்கிறது. ஆகையினால் அரசின் உதவியின் மூலமோ, கூட்டுறவுத் துறையின் உதவியின் மூலமோ கடன் கொடுக்க வழிவகை செய்தால்தான், இந்த இரண்டு மசோதாக்களும் அனுகூலமாக இருக்கும் என்ற யோசனையைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இரண்டு சட்டங்களும் நல்ல சட்டங்கள். இது நேரடியாக மக்களுக்கு அனுகூலமாக இருக்க வேண்டுமானால், இந்த இரண்டு காரியங்களையும் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : தலைவரவர்களே, இந்த மசோதாவில் மக்களுக்குக் கடன் நிவாரண சம்பந்தமாக நல்ல

முடிவுகளை எடுத்திருக்கிறோம். கூட்டுறவுக் கூட்டங்களிலே "கன்சிலியேஷன் போர்டு"—சமரச போர்டு ஏற்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரிடம் சொன்னேன். 1938-ல் ஏற்பட்ட சமரச போர்டிலே நான் சிவகாசி சமரச போர்டிலிருந்து 1,600 வழக்குகளை சமரசம் செய்திருக்கிறேன். தமிழ் நாட்டிலேயே கும்பகோணத்திலும், சிவகாசியிலும்தான் அதிகமாக சமரசம்—ராஜாஜியின் சட்டத்தின் கீழ்—செய்தோம். இப்படிப்பட்ட சட்டம் கட்டாயமாகச் செய்யப் படவேண்டும். இல்லாவிட்டால் கோர்ட்டுகளில் போய் சூட் போட்டு சமரசம் வருவதற்குள்ளாக கடன்பட்டவர்கள் கஷ்டப் படுவார்கள். ஆகவே அதைக் கட்டாயமாகச் செய்ய வேண்டும். அப்படி " ஆக்ட் " கொண்டுவருவதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். எதிர்க் கட்சித் தலைவர் சொன்ன மாதிரி, வட்டி அதிகமாக வசூலிக்கிறார்கள். கிராமங்களில் (Interest) இண்டரஸ்ட்—24 சதவிகிதம், 30 சதவிகிதம் என்று வாங்குகிறார்கள். கூட்டுறவுத் துறையிலே சென்று பல வருடங்களில் பல பிரிவிலும் கடன் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவ்வளவு கொடுத்தும், 24 சத விகிதம் கடன் வாங்குவது கிராமங்களில் இருந்து வருகிறது. கண்கூடாகப் பார்க்கிறோம். ஆகவே, கிராமங்களில் லேவாதேவியே இல்லாமல் செய்து விடுவது நல்ல வழி என்று நினைக்கிறேன். அப்படிச் செய்யாவிட்டால், நமது ஜனங்களின் நிலைமை எப்படி இருக்கிறது என்றால், இங்கே எவ்வளவு கொடுத்தாலும், கொடுத்ததை எல்லாம் வாங்கிக் கொண்டு 24 சதவிகிதம், 30 சதவிகிதம் வட்டியாகக் கொடுக்கிற முறை இருந்து கொண்டிருக்கிறது. அதற்காக, இந்த கிராமங்களில் தனிப்பட்டவர்கள் லேவாதேவியே இல்லாமல் செய்தால்தான், இந்தக் கெட்ட பழக்கத்தை ஒழிக்க முடியும். அனுபவ சாத்தியம் இல்லை என்று சொல்வது வேறு விஷயம். அவ்வளவு தூரம் மோசமாக வந்து விட்டது இந்தப் பழக்கம். எல்லாத் துறைகளிலும் கடன் வாங்க ஆரம்பித்தும்—நிலவள வங்கியிலிருந்தும், ஷார்ட் டேர்ம், லாங் டேர்ம் லோன்கள், கிணறு வெட்ட லோன்கள்—இப்படி பல துறையிலும் வாங்க ஆரம்பித்தும், இந்தத் தனிப்பட்ட லேவாதேவிக்காரர்களிடமிருந்தும் வாங்குகிறார்கள். நிலங்களைச் சீர்திருத்தம் பண்ணுகிறோம் என்று சொல்லி, ரூ. 3,000, ரூ. 4,000 என்று வாங்குகிறார்கள். அப்படி பண்ணாமலேயே, அப்படி வாங்கிய பணத்தை இந்த அதிக வட்டிக்காரர்களிடம் வட்டியாகக் கொடுத்து பணத்தை விரயம் பண்ணுகிறார்கள். இதைக் கண்கூடாகப் பார்க்கிறோம். இங்கிலாந்தில் லேவாதேவியே இல்லை என்று ஒரு ரிடையர்ட் ஐ.சி.எஸ். ஆபீசர்

சொன்னார். அப்படி ஒரு சட்டம் ஏற்படுத்தி, ஜனங்களுக்கு நன்மை செய்ய வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, இந்த மசோதாவை வரவேற்று நல்ல கருத்துக்களையெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு அங்கத்தினர் திரு. தாமோதரன் அவர்கள் விரிவு படுத்தாவிட்டாலும், பெருந்தன்மையாகக் கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். லேவாதேவியை நிறுத்தி விடலாம் என்ற கருத்தை திரு. ஜெயராம ரெட்டியார் சொல்லியிருக்கிறார்கள். இதற்கு அடிப்படைக் காரணம் கிராம மக்களின் தேவைகள் எல்லாவற்றிற்கும் கடன் கொடுக்கக் கூடிய ஒரு அரசாங்கம் உருவாகியிருப்பதுதான் என்பதை நாமெல்லாம் அறிவோம். இப்போதே, கூட்டுறவுத் துறையில் விவசாயிகளுக்கு எந்தக் காலத்திலும், எந்தத் தேவைக்குப் பணம் வேண்டுமானாலும் கொடுக்க வேண்டுமென்ற கொள்கை பலமாக வலியுறுத்தப்பட்டது. இருக்கின்ற கொள்கை அப்படியில்லை என்று நன்றாகத் தெரியும். மாநில அரசு வங்கிகளோ கூட்டுறவுத் துறை வங்கிகளோ கிராமத்திலுள்ள மக்களுக்கு அத்தனை தேவைகளுக்கும் பணம் கொடுக்க வேண்டுமென்றால், முடியுமா என்பது நாமெல்லாம் அறிந்த செய்தியாகும். இந்த முறை வெற்றி பெற வேண்டுமென்ற கருத்தை வரவேற்கிறோம். நிச்சயம், அரசாங்கம் ஏராளமான பண வசதிகளை தேவைக்கேற்றவாறு கிராமத்திலுள்ள மக்களுக்கும், தொழிலாளர்களுக்கும், விவசாயிகளுக்கும் கொடுக்க எடுக்கும் முயற்சி வெற்றி பெறும் என்ற நம்பிக்கை இருக்கிறது. ஆனால் இப்படி ஒரு சட்டம் கொண்டு வந்திருப்பது, கடன் வாங்குகிறவர்கள் அத்தனைபேருக்கும் பயன்படும் நோக்கத்தோடு அல்ல. இது சமுதாயத்தில் அடித்தளத்திலுள்ளவர்களுக்கு மட்டுமே பயன்பட வேண்டுமென்ற நோக்கத்தோடு கொண்டு வரப்பட்டது. இன்னும் அதிகமாக சொல்லிக்கொண்டே போனால், எல்.டி.சி., யு.டி.சி. என்று போய், புரோநோட் வளர்ந்துகொண்டே போய் விடும். இது எல்லாக் கட்சியினரும் ஒப்புக்கொண்ட ஒன்று. விரிவு படுத்த வேண்டுமென்று அரசாங்கம் இப்போது கருதவில்லை. அதே சமயம், கூட்டுறவு சம்பந்தப்பட்ட விதிவிலக்கு கொடுத்திருக்கிறார்கள். இது தேவை தானா என்று விவாதம் செய்யப்பட்டது. முதல் காரணம், அந்த நிறுவனங்கள் எல்லாம் மத்திய, மாநில அரசுக்குச் சொந்தமான நிறுவனங்கள். இரண்டு மடங்கு வட்டியைக் கேட்கக்கூடிய துர்பாக்கியம் இந்த நிறுவனங்களுக்குக் கிடையாது. அவ்வளவு நன்மைகள் இதற்குக் கிடையாது. அதிக வட்டி கொடுக்கக

1972 ஆகஸ்ட் 24] [திரு. செ. மாதவன்]

கூடிய நன்மையை அவைகளுக்குத் தான் கொடுத்திருக்கிறார்கள். அந்த வட்டி கூட்டுறவு நிறுவனங்களிலோ, அரசு நிறுவனங்களிலோ இல்லை. மேலும், ஒத்தி, ஈடு வைத்திருக்கக் கூடிய சலுகை அவற்றிற்குத் தந்திருக்கிறார்கள். 30 ஆண்டு ஒத்தி வைத்திருந்து, மீட்கப்படாவிட்டால், ரத்தாகிற சலுகை இந்த நிறுவனங்களுக்கு வர முடியாது. மணிலெண்டர்கள் வாங்கக் கூடிய ஒத்தி, ஈடு வாங்குவதில்லை. ஆகவே, இந்த விதிவிலக்கு கொடுக்க வேண்டுமென்ற முடிவை அரசு எடுத்தது. இந்த நிறுவனங்கள் யார் யாருக்குக் கடன் கொடுக்க வேண்டுமென்று விதி வைத்திருக்கிறார்கள். ஏழ்மையின் காரணத்தாலும், மழையில்லை, அதனால் விளைச்சல் இல்லை போன்ற காரணத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்குக் கடன் கொடுக்கும் திட்டத்தை வைத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட திட்டம் தனிப்பட்டவர்களிடம் கிடையாது. ஆகவே இதற்கு விதிவிலக்குக் கொடுக்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தச் சட்டம் பயன்பட வேண்டுமானால், "கன்சிலியேஷன் போர்டு" வேண்டுமென்று வலியுறுத்தப்பட்டது. பொறுக்குக் குழுவிலும் கேட்டார்கள். கன்சிலியேஷன் போர்டு உருவாக்கலாம் என்ற சட்டம் 1938-ல் அல்ல, 1936-ம் ஆண்டு கொண்டுவரப்பட்டது. இந்தச் சட்டத்திற்காக அதைக் கொண்டுவர வேண்டுமென்கிற வாதம் பொருத்தமாக இருக்காது. ஆகவே, சட்டம் வருவதற்கு முன்னால் ஒரு நாட்டில் கடன் சுமை பெருகியிருக்குமானால், நீதிமன்றங்களில் லிடிகேஷன் அதிகமாயிருக்கின்ற நிலைமை காணப்படும். நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கூற விரும்புவது என்னவென்றால், அப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டால், கன்சிலியேஷன் போர்டு அமைப்பதற்கு இந்த அரசாங்கம் எந்தவிதமான தயக்கமும் காட்டாது என்பதை மட்டும் இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆனால் இப்படிப்பட்ட "கன்சிலியேஷன்" என்கிற பேர் போட்டால்தான், அந்தச் சட்டத்தின் பயன் கிடைக்கும் என்ற ஒரு வாதம் பொருத்தமற்றது. 1972-க்கு முன்னாலேயே, கொடுக்கின்ற கடனுக்கு வட்டியாக இரண்டு மடங்கு அசல் கொடுத்திருந்தால், அந்தக் கடன் தீர்ந்துவிடும் என்று சொல்லியிருக்கிறோம். இன்னும் "ஸ்கேலிங் டவுன்" கொடுத்திருக்கிறோம். நீதிமன்றத்திலே பாக்கிக்காக அவர்கள் வழக்குப் போட்டாலும், கோர்ட்டின் கெடுபிடி இருக்காது என்ற அந்த உறுதியை நான் பொறுக்குக் குழுவில் கொடுத்திருக்கிறேன். "கிரெடிடர்" மட்டுமல்ல, "டெட்டர்ஸ்" மனுப்போட்டு, அதற்கு கோர்ட் பீஸ் அதிக

மில்லாமல் கடன் தொகை விவகாரம் கோர்ட்டுக்குப் போகாமலேயே பயன்படும் வாய்ப்பை அரசு உருவாக்கும் என்ற உறுதி கொடுத்திருக்கிறேன். நிச்சயம் கன்சிலியேஷனுக்கு வழக்குரைஞர்கள் பீஸுக்குப் பயப்பட வேண்டாம். அதிகமாக வழக்குரைஞர்கள் இருக்கின்றோம், அதிகமாக வாங்கமாட்டோம். ஆனால் கன்சிலியேஷன் இல்லாமலேயே. அந்த நன்மையைப் பெற முடியும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். எதிர்க் கட்சித் தலைவர் குறிப்பிட்டது போல, தமிழ் நாட்டில் அப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கும் என்று தெரிய வருகிறது. வருவாய்த் துறை அதிகாரிகள் சென்றிருக்கிறார்கள். இருக்கிற சட்டம் பயன்படவில்லையென்றால், "கன்சிலியேஷன் போர்டு" போடுவதற்கு இந்த அரசாங்கம் தயங்காது என்ற உறுதியை அரசாங்கத்தின் சார்பில் கொடுக்கின்றேன். மசோதாவை விரிவுபடுத்தும் தீர்மானத் திருத்தத்தை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : மன்றத்தின் முன் உள்ள கேள்வி :

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1972 ஆம் ஆண்டு கடன் நிவாரண சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 21/1972) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது. சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 28 வரை, மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, நெடுந்தலைப்பு, முகப்புரை ஆகியவை, மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. ஒ. பி. இராமன் : தலைவரவர்களே, "சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு கடன் நிவாரண சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 21/1972) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1972 ஆகஸ்ட் 24]

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்: மன்றத்தின் முன் உள்ள கேள்வி:

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு கடன் நிவாரண சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 21/1972) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

(தற்காலிகத் தலைவர் திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு—தலைமை.)

(2) தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு விவசாயிகள் கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1972):

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவர் அவர்களே, "சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு விவசாயிகள் கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு@ (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1972) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்." என்று முன்மொழிகிறேன்.

தமிழ்நாடு 1938-ஆம் ஆண்டு விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1938) விதித்துறைகளில் பல, காலத்திற்கு ஒவ்வாதவையாகிவிட்டன. இச்சட்டத்தை இன்றைய நிலைமைக்கேற்ப மாற்றியமைக்கவும், இம்மாநிலத்தின் கடன்பட்டுள்ள விவசாயிகளுக்குத் துயர் தணிப்பு அளிக்கவும் இச்சட்ட வரைவு கொண்டுவரப்பட்டுள்ளது என்பதை இந்த அவையினர் அறிவர்.

இச்சட்ட வரைவு குறித்து வந்த முறையீடுகளைப் பரிசீலித்தும், நேரில் சான்று பகர வந்தவர்களை விசாரணை செய்தும், இணை ஆய்வுக் குழு இச்சட்டவரைவில் சில மாற்றங்களைச் செய்துள்ளது. அவ்வாறு செய்யப்பட்டுள்ள முக்கிய மாற்றங்களில் சிலவற்றை நான் கூற விழைகிறேன்.

(1) மூலச் சட்டத்தில், விவசாயிகளுக்கு வழங்கப்படும் கடன் களுக்கு $6\frac{1}{4}$ சதவீத வட்டி வரையறுக்கப்பட்டிருந்தது. கூட்டுறவுத் துறையிலும், வங்கிகளிலும் நிலவிவரும் வட்டிவீதங்களைக் கருத்திற் கொண்டு, மேற்படி வட்டி வீதம் ஆண்டுக்கு 9 சதவீதமாக உயர்த்தப் பட்டுள்ளது.

@ 232—243-ம் பக்கங்களில் இணைப்பு V ஆக அச்சிடப்பட்டுள்ளது.